In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No.157/2021 Deposition of Witness: PW.19

Name: Sivakumar Calling:

Father Name: Religion:

Village: Caste:

Taluk: Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 29-07-2025.

**(Accused 3 and 4 absent. petition u/s 355 BNSS. filed and allowed Other accussed are present.)**

பட்டியல் சாட்சி –26 திரு. சிவக்குமார் காவல் துணை கண்காணிப்பாளர் ஆய்வாளர் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அசா.19 முதல் விசாரணை செய்யப்பட்டார்.

தற்போது புதுக்கோட்டை மாவட்டத்தில் மத்திய குற்றப்பிரிவு –2 ல் பணி செய்து வருவதால் சாட்சி விசாரணை மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்ற காணொளி சாட்சி விதிகள் 2020 ன்படி காணொளி காட்சி மூலம் பதிவு செய்யப்படுகிறது. காணொளி காட்சியின் நீதிமன்ற முனையில் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களும், நீதிமன்ற ஊழியர்களும், ஒருங்கிணைப்பாளராக நீதிபதி உதவியாளர் திரு.R.சசிக்குமார் என்பவரும், அரசு தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.P.மகேந்திரன் அவர்களும், எதிரிகள் தரப்பில் வழக்குரைஞர்கள் திரு. ரமேஷ்குமார், அவர்களும் ஆஜரில் இருந்தார்கள். எதிர்முனையில் வழக்கில் சாட்சிமளிக்க வந்துள்ள திரு.சிவக்குமார், காவல் ஆய்வாளர் அவர்கள் இருக்கிறார். இருதரப்பினரின் சம்மதத்தின் பேரில் சாட்சி விசாரணை காணொளி காட்சி மூலம் பதிவு செய்யப்படுகிறது. சாட்சியின் அடையாளத்தை எதிர்முனையிலுள்ள ஒருங்கிணைப்பாளர் சரி பார்த்து சாட்சியை அடையாளம் காட்டிய பிறகு காணொளி பதிவு தொடங்கப்படுகிறது.

**முதல் விசாரணை:–**

தற்போது புதுக்கோட்டை மாவட்டத்தில் மத்திய குற்றப்பிரிவு –2 ல் பணி செய்து வருகிறேன். கடந்த 02.04.2019 ம் தேதி வடமதுரை காவல்

நிலையத்தில்க காவல் ஆய்வாளராக பணியாற்றியபோது என்னிடம் ஒப்படைக்கப்பட்டமேற்படி காவல்நிலைய கு.எண்.17/2019 u/s 302 IPC @ 147, 148, 342, 302 IPC ன் கீழான வழக்கு கோப்பை பார்வையிட்டு மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அன்றைய தினமே காலை 10 மணியளவில் சம்பவ இடம் சென்று பார்வையிட்டபோது எனக்கு முன்னர் விசாரணை செய்த ஆய்வாளர் திரு.வைரம் அவர்கள் பார்வையிட்டு பார்வை மகசர் வரைபடம் தயார் செய்ததுபோலவே இருந்ததால் நான் தனியாக தயார் செய்யவில்லை. பின்னர் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் 6 வது எதிரி பால்ராஜ் என்பவர் மாமரத்துப்பட்டி அருகில் இருந்தவரை காலை 11 மணிக்கு காரணம் கூறி  கைது செய்து அவரது உறவினரிடம் தெரியப்படுத்தி நிலையம் வந்து நீதிமன்றக் காவலுக்குட்படுத்தினேன். பின்னர் சாட்சிகள் கருப்பையா, செல்லையா, சந்தானகிருஷ்ணன், சீனிவாசன், லட்சுமி, கனகராஜ், காளிதாஸ், தேவிகா, தமிழ்மணி, சக்திவேல், சதீஷ்குமார், ஜெயா, சின்னச்சாமி, ருத்ராதேவி, மணி, சார்பு ஆய்வாளர் ராஜசேகர், பிரகாஷ், பாரவேல் ஆகியோர்களை விசாரிக்க ஏற்கனவே காவல் ஆய்வாளர் வைரத்திடம் கூறியதுபோலவே என்னிடமும் கூறியதால் தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை. பின்னர் 24.4.2019ம் தேதி 4ம் எதிரி சின்னகுஞ்சு என்ற செல்லக்குஞ்சு என்பவரை மலைக்கேணி மேடு என்ற இடத்தில் பகல் 12 மணிக்கு காரணம் கூறி  கைது செய்து உறவினரிடம் தெரியப்படுத்தி எதிரியிடமிருந்து வாக்குமூலம் பெற்று நிலையம் கொண்டுவந்து பாராவில் ஒப்படைத்தேன். பின்னர் சாட்சிகள் சீனிவாசன், லட்சுமி, சந்தானகிருஷ்ணன், ஹரிஹரன் ஆகியோர்களை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 4ம் எதிரியை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றக்காவலுக்குட்படுத்தினேன். உடல் உள்ளுறுப்புக்களை பகுப்பாய்வுக்கு அனுப்புவதற்காக நீதித்துறை நடுவர் அவர்களிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அந்த வேண்டுகோள் கடிதம் அதசாஆ.18.  பின்னர் 29.4.2019ம் தேதி சாட்சிகள் செல்வகணேஷ், தடய அறிவியல் அலுவலர் நவநீதிகிருஷ்ணன், அறிவியல் பகுப்பாய்வாளர்

அவர்களையும் விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பகுப்பாய்வு அறிக்கைகள் பெற்றேன். உடல்உள்ளுறுப்பு பகுப்பாய்வு அறிக்கை (Visra Report) அதசாஆ.19. உயிரியல் அறிக்கை அதசாஆ.20. குருதி வடிநீரியல் அறிக்கை அதசாஆ.21. பின்னர் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் ஜெயலலிதா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். பின்னர் 30.04.2019ம் தேதி சாட்சிகள் த.கா.608 செல்வராஜ், முநிகா.சாந்தி, ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 23.05.2019ம் தேதி 302 IPC @ 147,148, 342, 302 @ 147, 148, 149, 342, 302 IPC ன்படி சட்டப்பிரிவை மாறுதல் செய்து சட்டமாறுதல் அறிக்கை உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அந்த மாறுதல் அறிக்கை அதசாஆ.22. அன்றைய தினமே சாட்சிகளின் விசாரணை முடித்து எதிரிகள் மீது மேற்கண்ட பிரிவுகளின்கீழ் குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

இவ்வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் வைரம் அவர்கள் விசாரித்த சாட்சிகள், சான்றாவணங்களை பார்த்துதான் மேல்விசாரணை செய்தேன் என்றால் சரிதான். வடமதுரை காவல் நிலையத்தில் 2019ம் ஆண்டு எந்த மாதம் எந்த தேதி ஆய்வாளராக பணியில் சேர்ந்தேன் என்றால் ஆவணங்களை பார்வையிட்டால்தான் சொல்லமுடியும். இந்த வழக்கைப்பொறுத்து 09.02.2019 முதல் 02.04.2019 வரையிலான காலகட்டத்தில் எந்தவித சாட்சிகளின் வாக்குமூலங்களோ, சான்றவணங்களோ என்னால் பெறப்படவில்லை என்றால் சரிதான். என்னால் கைதுசெய்யப்பட்ட 4 மற்றும் 6வது எதிரிகளிடமிருந்து எந்தவித ஒப்புதல் வாக்குமூலமோ, சான்றுப்பொருட்களோ கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் சாட்சி சந்தானகிருஷ்ணன் கொடுத்த மறுவாக்குமூலத்தில் சம்பவத்திற்கு முதல் நாள் 9.1.2019ம் தேதி இரவு 7 மணிக்கு சந்தானகிருஷ்ணனும் அவரது மகன் ஹரிஹரனும் 1வது எதிரியை சந்தித்து ரூ.1,50,000/– கொடுத்ததாக

சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. அதேபோல் அசா2 எனது விசாரணையில் இறந்துபோன சிவக்குமாருடன் சென்று 9.1.2019 ம் தேதி ரூ.1,50,000/– கொடுத்து 1 வது எதிரி பெற்றுக்கொண்டதாக சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. சந்தானகிருஷ்ணனின் மறுவாக்குமூலத்தில் கீழேயிருந்து முதல் பக்கத்தில் 3 வது லைனில் கரந்தன் என்பவரது தோட்டத்திற்கு 10.01.2019 ம் தேதி இரவு வாருங்கள், அப்போது உண்மையான நாகமாணிக்கக்கல்லை ஒளியுடன் டெஸ்டை காட்டி கொடுப்பதாகவும் கரந்தன் வீட்டுக்கு காட்டுக்கு வரச்சொன்னார், அதன்படி ரூ.1,50,000 த்தை எடுத்துக்கொண்டு எனது மகன் ஹரிஹரனும், திண்டுக்கல் என்.எஸ்.நகரைச்சேர்ந்த சிவக்குமாருடன் சம்பவ இடத்திற்கு சென்று 10.01.2019 ம் தேதி இரவு ரூ.1,50,000/– கொடுத்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். என்னுடைய விசாரணையில் ரூ.1,50,000/– ஐ எந்த எதிரியிடமிருந்தாவது கைப்பற்றினேனா என்றால் கைப்பற்றவில்லை. இவ்வழக்கு சம்பவமே நாகரத்தினக்கல் என்பதுதான் முக்கிய நிகழ்வே. இது சம்மந்தமாக நாகரத்தினல்லை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைத்தேனா என்றால் எதிரி கொடுத்த வாக்குமூலத்தில் அந்தப்பொருள் காணாமல் போய்விட்டது எனச்சொன்னதால் கைப்பற்றவில்லை. இவ்வழக்கில் 1 வது எதிரிக்கு சம்பவத்தன்று காயமேற்பட்டது என்பது குறித்து விசாரித்து குற்றப் பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. 1 வது எதிரிக்கு எப்படி காயமேற்பட்டது என்பது குறித்து நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அதசாஆ.21 அறிக்கையில் சம்பவ இடத்தில் கைப்பற்றியதாக கூறப்படும் இரத்தம்பட்ட மண், இரத்தம்படாத மண் ஆகியவை பகுப்பாய்வு செய்யப்பட்டு வந்த அறிக்கையில் Result of group in test incolclusive என்றும் அதேபோல் 1 வது எதிரியிடமிருந்து கைப்பற்றியதாக கூறப்படும் கைலியிலும் மேற்கண்டவாறு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் இறந்தவரின் துணிகள் மற்றும் வழக்குச்சான்றுப்பொருளான கத்தியிலும் இரத்தவகை O எனமட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் பாசிட்டிவா, நெகட்டிவா என

குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 1வது எதிரியின் இரத்தவகை O குருப்பைச்சேர்ந்தது என்றும் இறந்துபோனவரின் O இரத்தவகை குருப்பைச் சேர்ந்தது என எதைவைத்து தெரிந்து கொண்டேன் என்றால் அதுபற்றிய விவரங்கள் வழக்குக்கோப்பில் தெளிவாக இல்லை. புகாரில் 1வது மற்றும் 3வது எதிரிகளின் பெயர்கள் மட்டுமே உள்ளது என்றும், சாட்சிகளின் விசாரணைக்கு பின்னர்தான் மற்ற எதிரிகளின் பெயர் சேர்க்கப்பட்டது என்றால் சரிதான். சம்பவம் நடந்த நேரம் இரவு நேரம் என்பதால் இருட்டாக இருட்டாக இருந்த பகுதி என்றால் சோலார் லைட் இருந்தது. சோலைர் லைட் இருந்தது என்று பார்வை மகசர் மற்றும் வரைபடம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 2 முதல் 6 எதிரிகள் இந்த வழக்கில் சம்மந்தப்பட்டுள்ளார்கள் என்பது குறித்து கண்ணுற்ற சாட்சிகளை வைத்து அடையாள அணிவகுப்பு நடத்தினேனா என்றால் சாட்சிகளுக்கு ஏற்கனவே எதிரிகளை தெரியும் என்பதால் அணிவகுப்பு நடத்தவில்லை. வழக்கு சம்பவத்தில் இருந்ததாக சொல்லப்படும் சந்தானகிருஷ்ணன், ஹரிஹரன் ஆகியோர்களின் இரத்தம்பட்ட உடைகளை கைப்பற்றினேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் புகார் கொடுத்த சந்தானகிருஷ்ணன் நாகரத்தினக்கல் கொடுப்பது சம்மந்தமாக பணம் பெற்று ஏமாற்றியது குறித்து இதற்கு முன்பு ஏதாவது புகார் செய்துள்ளாரா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் சம்பவ இடத்தில் சிவக்குமாருக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றும் அதனால்தான் இரத்தம்பட்ட மண், இரத்தம்படாத மண் மற்றும் 1வது எதிரி அணிந்திருந்த கைலி ஆகியவற்றில் இரத்தம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 1வது எதிரிக்கு ஏற்பட்ட காயம் குறித்து நான் விசாரணை மேற்கொள்ளாததால் எனது புலன்விசாரணையில் உண்மை சங்கதிகள் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் என்னால் பதிவு செய்யப்பட்ட சாட்சிகளின் மறுவாக்குமூலங்கள், சான்றாவணங்கள் அனைத்தும் நீதிமன்றத்திற்கு காலதாமதமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், குற்றப்பத்திரிக்கையில்

குறிப்பிடப்பட்டுள்ள சட்டப்பிரிவுகள் எதிரிகளுக்கு பொருந்தாது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் எந்தவித குற்றச்செய்கையிலும் ஈடுபடவில்லை என்றும், எதிரிகள் மீது தவறாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை –இல்லை.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.07.29 15:23:04 +0530

Principal District Judge,
Dindigul.